செ.வெ.எண்: 497/206 நாள்: 05.08.2016

# பத்திரிகைச்செய்தி

கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள அனைத்து ஊராட்சி மற்றும் பேரூராட்சிகளில் குழந்தைகள் பாதுகாப்புக்குழு கூட்டம் 16-08-2016 அன்று காலை 11.00 அளவில் மாவட்டம் முழுவதும் நடத்தப்பட உள்ளது.

குழந்தைகள் பாதுகாப்புக் குழுவில் அரசு மற்றும் அரசு சாரா உறுப்பினர்கள் 10 நபர்களை மாவட்ட ஆட்சியர் நியமித்துள்ளார்கள்.

அப்பகுதி ஊராட்சி/பேரூராட்சி தலைவர் அவர்கள் அக்குழுவின் தலைவராகவும், அப்பகுதி கிராம நிர்வாக அலுவலர் குழுவின் செயலாளராகவும், அப்பகுதி பள்ளி தலைமையாசிரியர் மற்றும் தலைமையாசிரியரால் தேர்வு செய்யப்படும் இரண்டு பள்ளி குழந்தைகள், மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலுவலக பணியாளர் ஒருவர், அப்பகுதி அங்கன்வாடி பணியாளர், அப்பகுதி கிராம செவிலியர், தொண்டு நிறுவன பிரதிநிதி, சுயஉதவிக்குழு உறுப்பினர் மற்றும் உள்ளூர் காவல்துறை பிரதிநிதி ஆகியோர்கள் குழுவின் உறுப்பினராகவும் நியமிக்கப்பட்டுள்ளார்கள்.

குழந்தைகள் பாதுகாப்புக்குழு கூட்டத்தில்

1. குழந்தைத்திருமணம் தடுத்தல்
2. குழந்தைத்தொழிலாளர் முறை ஒழித்தல்
3. குழந்தைக்கடத்தல் - தடுத்தல்
4. பிச்சையெடுக்கும் குழந்தைகள் மறுவாழ்வு – குறித்து
5. குழந்தைகளுக்கு எதிரான தீங்கிழைத்தல்கள் தடுத்தல்
6. அனைவருக்கும் கல்வி குறித்து
7. பாலியல் குற்றங்களிலிருந்து குழந்தைகளைப் பாதுகாத்தல்
8. குழந்தைகளின் அடிப்படை உரிமைகளை பாதுகாத்தல் போன்ற குழந்தைகள் பிரச்சனைகள் குறித்து விவாதிக்கப்படும்.

விவாதிக்கப்பட்ட கருத்துக்கள் சம்பந்தமான அறிக்கைகள் மாவட்ட ஆட்சித்தலைவருக்கு அனுப்பி நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

**மாவட்ட ஆட்சித்தலைவர்**

---

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், கன்னியாகுமரி மாவட்டம்.**